Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, APRIL 04, 2023

செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 04, 2023 | ஒளி: 08 கதிர்: 243 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE

## 14 வருடங்களின் பின் 3 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை

**க. அகரன்**

2009 ஆம் ஆண்டு மே மாதம் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவல் மற்றும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத காரணத்தால் அவர்களை அனைத்து குற்றச்சாட்டுகளிலும் இருந்து, வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், திங்கட்கிழமை (03) விடுவித்து விடுதலை செய்தார்.

யாழ். வேலணையை சேர்ந்த இ. திருவருள் (வயது 45), யாழ். கரவட்டியை சேர்ந்த ம. சுலக்சன் (வயது 34), முள்ளியவளையை சேர்ந்த க. தர்சன் (வயது 33) ஆகிய மூவருமே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## காஸ் குறைகிறது




12.5 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரோ எரிவாயு சிலிண்டரொன்றின் விலை இன்று செவ்வாய்க்கிழமை (04) நள்ளிரவு முதல் அமலாகும் வகையில் சுமார் 1,000 ரூபாயால் குறைக்கப்பட உள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ், திங்கட்கிழமை (03) தெரிவித்தர்.

இன்று (04) காலை விலைகள் அறிவிக்கப்படும் என்றும் 5 கிலோ கிராம் மற்றும் 2.3 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளும் குறைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



பூச்சி, களைகொல்லிகளின்

## விலை குறைப்புக்கும் சலுகைக்கும் இணக்கம்

அனைத்து களைகொல்லிகள் மற்றும் பூச்சிகொல்லிகளின் விலையை 20 சதவீதத்தால் குறைப்பதற்கும், குறிப்பிட்ட சில பூச்சிகொல்லிகளின் விலையில் 40 சதவீதம் வரை சலுகைகளை வழங்குவதற்கும் நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.


தொடர்ச்சி P2

## கோழி இறைச்சி விலை கூடும்

எதிர்வரும் நீண்ட வார இறுதி விடுமுறை மற்றும் அடுத்த வாரத்தில் புத்தாண்டு கொண்டாடப்பட உள்ள காரணத்தால், கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கும் என்று இலங்கை கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் தெரிவித்தது.

திங்கட்கிழமை (03) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அந்தச் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்

# குரல்களை நசுக்கும் முயற்சி

தற்போதைய அரசாங்கம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை முன்வைத்து, துன்பப்படும் மக்கள் தமது கோரிக்கைகளுக்காக குரல் எழுப்பும் போது, அவர்களை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி, மனித உரிமைகளை நசுக்கி வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பொரளையில் ஞாயிற்றுக்கிழமை (02) இடம்பெற்ற வட்டார மட்ட மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## ரூபாயின் பெறுமதி சற்றே உயர்ந்தது




இலங்கை மத்திய வங்கியால் திங்கட்கிழமை (03) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களில் அடிப்படையில் ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி சற்று அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2

## புத்தாண்டு சுபநேரப் பத்திரம் ஜனாதிபதியிடம் கையளிப்பு



தமிழ், சிங்கள புத்தாண்டு சுபநேரப் பத்திரம், பாரம்பரிய மற்றும் சம்பிரதாய முறைப்படி ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து திங்கட்கிழமை (03) முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## பாடசாலைகளுக்கு நாளை முதல் விடுமுறை

**மே 13 முதல் மே 24 வரை சா/த பரீட்சை**

தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அரச மற்றும் அரச அங்கிகாரம் பெற்ற பாடசாலைகளுக்கு நாளை (05) முதல் விடுமுறை வழங்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், 2023ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை பாடசாலை கல்விச் செயற்பாடுகளின் இரண்டாம் கட்டம் ஏப்ரல் 17ஆம் திகதி ஆரம்பமாகி, மே மாதம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவடையும். முதலாம் தவணையின் மூன்றாம் கட்டம் மே 25ஆம் திகதி ஆரம்பமாகும்.



கொழும்பில் இரண்டு ஆர்ப்பாட்டங்கள்

## ஒன்றில் தண்ணீர் பிரயோகம்; மற்றொன்றில் தள்ளுமுள்ளு

ஸ்ரீலங்கா டெலிகொம் மற்றும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் கொழும்பில் திங்கட்கிழமை (03) நடத்தப்பட்ட இரு வேறு ஆர்ப்பாட்டங்களில், மாணவர் ஒன்றியத்தின் ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதுடன், மற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாருடன் தள்ளு முள்ளு ஏற்பட்டது. ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை

தொடர்ச்சி P2



## உள்ளூர் பால்மா விலை சரியும்

**குறைக்க முடியாது என்கின்றனர் பால் உற்பத்தியாளர்கள்**

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பால் மாவின் விலையை திங்கட்கிழமை (03) முதல் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் பால்மா உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் ஆரியசிறி விதானகே தெரிவித்தார்.

தொடர்ச்சி P2


வசந்தவின் விடுதலை விவகாரம்

## மீளாய்வு மனு ஒத்திவைப்பு

அனைத்து பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகேவை அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவித்து கொழும்பு பிரதான நீதவான் பிறப்பித்த உத்தரவை இரத்து செய்யுமாறு கோரி சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனுவை ஜூன் 1ஆம் திகதி விசாரிப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம், திங்கட்கிழமை (03) தீர்மானித்தது.

பயங்கரவாத எதிர்ப்பு பணியகத்தின் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சட்டப் பிழையை திருத்திக் கொள்வதற்காகவே மனுவை

தொடர்ச்சி P2





## ஆசியான் நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்த பேச்சு

இலங்கை மற்றும் ஆசியான் நாடுகளின் தற்காப்புக் கலைகள், ஆயுர்வேதம் மற்றும் கலைகள் போன்றவற்றின் வளமான பாரம்பரியங்கள் மற்றும் கலாசாரங்களைப் பகிர்ந்து கொள்வதும் விஜயத்தின் பரிமாற்றத்தில் அடங்குவதாக வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார். விஜயங்களின் பரிமாற்றத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட தொடர்புகள் இலங்கைக்கும் ஆசியான் நாடுகளுக்கும் இடையில் மேலும் ஒத்துழைப்பை ஏற்படுத்தக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் ஆசியான் நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பான சந்திப்பொன்று, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தலைமையில் மார்ச் 30ஆம் திகதி அமைச்சில் இடம்பெற்றது. இலங்கையை தளமாகக் கொண்ட இந்தோனேசியா, மலேசியா, மியான்மர், தாய்லாந்து, வியட்நாம் ஆகிய ஆசியான் நாடுகளின் தூதரகத் தலைவர்கள் மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் இதில் பங்குபற்றினர்.

தொடர்ச்சி P2



## ஏப்ரல் 21 வரை சேர்க்க முடியாது

தேசிய பாடசாலைகளின் இடைநிலை தரங்களுக்கு மாணவர்களை உள்வாங்குவதற்கான கடிதங்கள், ஏப்ரல் 21 வரை வழங்கப்பட மாட்டாது என்று கல்வி அமைச்சு அறிவித்தது.

அமைச்சால் திங்கட்கிழமை (03) வெளியிடப்பட்ட விசேட அறிவித்தலிலேயே இந்த விடயம் அறிவிக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

கொழும்பு திண்மக் கழிவு திட்டத்தை

# அரச, தனியார் பங்களிப்பில் முன்னெடுக்க அனுமதி

கொழும்பு மாநகரப் பகுதியுடன் தொடர்புடைய திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டத்தை அரச மற்றும் தனியார் பங்களிப்பின் கீழ் நிலைபேறான முறையில் நடத்துவதற்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தை மேலும் அமல்படுத்துவதற்கு பொருத்தமான அமைப்பை தயார் செய்யுமாறு அமைச்சரால் அமைச்சின் செயலாளருக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைக்கு அமைய, தகுந்த முறைமையை தயாரிப்பதற்காக நிபுணர் தொழில்நுட்ப குழுவொன்று நியமிக்கப்பட்டது.

நிபுணர் தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையின்படி, ஆரம்பத் திட்டத்தின்படி திட்டத்தைப் பராமரிப்பதற்கு வருடாந்தம் சுமார் 2.125 பில்லியன் ரூபாய் செலவாகும்.

பொதுவாக, கொழும்பு நகரில் மாத்திரம் தினமும் 600 மெற்றிக் தொன் குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன. களனி பகுதியில் குப்பைகள் சேகரிக்கப்பட்டு அங்கிருந்து ரயிலில் அருவக்காடு பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு, தரம்பிரிக்கப்படும் அமைப்பில் சேமிக்கப்படும்.

அருவாக்காடு பகுதியில் 265 ஏக்கர் பரப்பளவில் இந்தத் தரம்பிரிக்கப்படுவதற்கான குப்பை கொட்டும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் பல ஏக்கர் பூங்காவாகவும், பாதுகாக்கப்பட்ட பகுதிகளாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் அழகுபடுத்தப்பட்டிருப்பதும் சிறப்புக்குரியது.

அரசாங்கப் பணத்தைப் பயன்படுத்தாமல் நிதி ரீதியாக இலாபகரமான மற்றும் நிலையான முறையில் நடத்துவதற்கு தனியார் நிறுவனத்துடன் இணைந்து செயற்படவுள்ளதாக தெரிவித்த

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## 14 வருடங்களின் பின் 3 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து விளக்கமறியலிலும், தடுப்பு காவலிலும் வைக்கப்பட்டிருந்த மூவரும் வவுனியா மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று மூவரின் சார்பில் மன்றில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு எதிராக சதித் திட்டம் தீட்டிய குற்றம் இவர்களுக்கு எதிராக சாட்டப்பட்டிருந்த நிலையில், இவர்கள் ஏற்கெனவே வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம் செல்லுபடியற்றது என்று நீதிமன்றம் தீர்மானித்ததாக குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து சுயாதீன சாட்சிகள் இவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டன போதும் அந்த சாட்சியங்கள் இவர்களது குற்றம் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூப்பிக்கப்படவில்லை என்பதன் காரணமாக அனைத்து குற்றங்களிலும் இருந்து இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்றார்.

மிக நீண்டகாலம் இருந்த அரசியல் கைதிகளின் வழக்காக இது காணப்படுகின்றது என்று தெரிவித்த அவர், உண்மையில் இவர்களது விடுதலை எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது எனத் தெரிவித்தார்.

விடுதலை செய்யப்பட்ட மூவரும் நீதிமன்றம் முன்பாக வருகை தந்திருந்த தமது குடும்பத்தினருடனும், தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் செயலாளரும் எம்.பியுமான செல்வராசா கஜேந்திரனையும் கட்டியணைந்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதுடன் தமது விடுதலைக்காக உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.

## காஸ் குறைகிறது

கடந்த பெப்ரவரி 5ஆம் திகதி விலை உயர்த்தப்பட்டதுடன் மார்ச் மாதத்தில் சிலிண்டர் விலைகளை லிட்ரோ நிறுவனம் அதிகரிக்கவில்லை.

தற்போது, 12.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டர் 4,743 ரூபாய்க்கும் 5 மற்றும் 2.3 கிலோகிராம் சிலிண்டர்கள் முறையே 1,904 ரூபாயாகவும் 883 ரூபாயாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட விலைகள் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கு மாத்திரம் பொருந்தும் என்பதுடன், தூரங்களின் அடிப்படையில் ஏனைய மாவட்ட விலைகள் வேறுபடுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

## கோழி இறைச்சி விலை கூடும்

கோழி இறைச்சிக்கான தேவை அதிகரிப்பதால் ஒரு கிலோ கிராம் இறைச்சியின் விலை 1200 ரூபாய் முதல் 1400 ரூபாய் வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கோழி இறைச்சிக்கான தேவையை பூர்த்தி செய்ய முடியுமா என்பதில் தங்களுக்கு சந்தேகம் உள்ளதாகத் தெரிவித்த அவர், கோழி இறைச்சியின் சில்லறை விலை விநியோகத்தைப் பொறுத்து இருக்கும் என்றார்.

குளிர்சாதனங்களில் உறைநிலையில் வைக்கப்பட்டுள்ள கோழி இறைச்சியானது தேவைக்கு ஏற்ற அளவில் பல்பொருள் அங்காடிகளில் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், புதிய பச்சை இறைச்சியின் விலை மாறுபடும் என்றும் குறிப்பிட்ட அவர், நுகர்வோரின் அவல நிலையை கருத்திற் கொண்டு இறைச்சி விலையை அதிகரிக்க வேண்டாம் என்று கோழி வியாபாரிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

# குரல்களை நசுக்கும் முயற்சி

இந்த அரசாங்கம் அதிக வரி மற்றும் அதிக மின் கட்டணத்தை அறவிடுவதன் காரணமாக சாதாரண மக்களுக்கு சுமையை ஏற்ப்படுத்தி முயற்சியா ண்மையாளர்களைக் கூட நிர்க்கதிக்கு ஆளாக்குவதாக கூறினார்.

இவ்வாறான மிகவும் துயர் நிலை ஏற்பட்டுள்ள போதிலும் அனைவரையும் தியாகம் செய்யுமாறு கோரும் அதேவேளை, பாரிய தொகையை செலவு செய்து பாராளுமன்ற உறுப்பினர்களை பேரம் பேசும் சதியில் தற்போதைய அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக சுட்டிக்காட்டினார்.

பாடசாலை குழந்தைகளுக்கு மதிய உணவும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்கு உணவும் கிடைக்காத இந்நாட்டில் முச்சக்கரவண்டி ஓட்டுநர் முதல் சுயதொழில் செய்பவர்கள் வரை அனைவரும் ஆதரவற்ற நிலையில் உள்ளதாக குறிப்பிட்டார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு பணம் இல்லாவிட்டாலும் கட்சி தாவுவதற்காக எம்பிக்களுக்கு செலுத்துவதற்கு கோடி கோடியாக பணம் இருப்பதாக எதிர்க்கட்சி தலைவர் மேலும் தெரிவித்தார்.

## விலை குறைப்புக்கும் சலுகைக்கும் இணக்கம்

இந்த சிறுபோகத்தில் களைகொல்லிகள் மற்றும் பூச்சிகொல்லிகளின் விலைகளை குறைப்பதற்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் தலைமையில் விவசாய அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

உலக சந்தையில் களைகொல்லிகள் மற்றும் பூச்சிகொல்லிகளின் லை குறைப்பு, டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வலுவடைந்தமை மற்றும் இறக்குமதித் தேவைகளுக்காக அரசாங்கம் டொலர்களை விடுவித்தமையினால் விலைகளை குறைக்க முடியும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தரமற்ற பூச்சிகொல்லிகளை விற்பனை செய்யும் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவதை தடை செய்யுமாறும், பூச்சிகொல்லி சட்டத்தின் கீழ் வழங்கக்கூடிய தண்டனைகளை அதிகரிப்பதற்கான திருத்தங்களை துரிதப்படுத்துமாறும் அமைச்சர் மஹிந்த அமரவீர பூச்சிகொல்லி பதிவாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

நாட்டுக்குள் கடத்தப்படும் பூச்சிகொல்லிகள் மீதான சோதனைகளை விரைவுபடுத்தவும், அதற்கு கடற்படையின் ஆதரவைப் பெறவும் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ரூபாயின் பெறுமதி சற்றே உயர்ந்தது

கடந்த வெள்ளிக்கிழமையுடன் (31) ஒப்பிடுகையில் இலங்கை ரூபாவின் மதிப்பு சற்று அதிகரித்துள்ளதுடன், ஏனைய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராகவும் ரூபாயின் பெறுமதி உயர்ந்துள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 314 ரூபாய் 82 சதமாகவும் விற்பனை விலை 332 ரூபாய் 58 சதமாகவும் திங்கட்கிழமை (27) பதிவாகியிருந்த நிலையில் கடந்த வாரம் டொலரின் பெறுமதி சதங்களால் உயர்ந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## புத்தாண்டு சுபநேரப் பத்திரம் ஜனாதிபதியிடம் கையளிப்பு

பாரம்பரிய முறைப்படி மேளதாளத்துடன் கொண்டுவரப்பட்ட சுபநேரப் பத்திரத்தை, புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஜனாதிபதிக்கு வழங்கி வைத்தார்.

வளர்பிறை தரிசனம், பழைய ஆண்டுக்கான நீராடல், புத்தாண்டுப் பிறப்பு, புண்ணியகாலம், உணவு சமைத்தல், சுப காரியங்களை ஆரம்பித்தல் கைவிசேடம் பெறுதல், உணவு உண்ணுதல், தலைக்கு மருத்துநீர் வைத்தல், தொழிலுக்காக புறப்படுதல், மரம் நடுதல் போன்ற சுப நேரங்கள் இதில் அடங்கும்.

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

## ஏப்ரல் 21 வரை சேர்க்க முடியாது




2 முதல் 4 மற்றும் 7 முதல் 10 வரையிலான இடைநிலை தரங்களுக்கு புதிதாக மாணவர்களை சேர்ப்பது குறித்து எதிர்வரும் 21 ஆம் திகதிக்குப் பின்னர் தேசிய பாடசாலைகளுக்கு அறிவிக்கப்படும் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதுவரை தேசிய பாடசாலைகளின் இடைநிலை தரங்களுக்கு மாணவர்களை உள்வாங்குவதற்கான கடிதங்களை கல்வி அமைச்சு வழங்காது எனவும் குறித்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது

## ஒன்றில் தண்ணீர் பிரயோகம் மற்றொன்றில் தள்ளுமுள்ளு

ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் பங்குகளை விற்பனை செய்வதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து டெலிகொம் நிறுவன ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்ட ஒரு நாள் வேலை நிறுத்தத்தின் போது, பொலிஸாருக்கும் ஊழியர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

ஸ்ரீலங்கா டெலிகொமின் 18 தொழிற்சங்கங்களின் பங்கேற்புடன், திங்கட்கிழமை (03) வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டு, கொழும்பு - கோட்டையில் உள்ள தொலைத்தொடர்பு தலைமையகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போதே முறுகல் நிலை ஏற்பட்டது.

இதேவேளை, கொழும்பு நகர மண்டபத்துக்கு அருகில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்காக பொலிஸாரால் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

பல்கலைக்கழகங்களில் நடைபெற்று வரும் அடக்குமுறைகளுக்கு எதிராக கொழும்பு லிப்டன் சுற்றுவ ட்டத்தில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## உள்ளூர் பால்மா விலை சரியும்



**அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வடைந்த நிலையில், பால்மா இறக்குமதியாளர் சங்கம், இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையைக் குறைத்தது.**

**1 கிலோ கிராம் பால் மா பொதி ஒன்றின் விலை 200 ரூபாயாலும் 400 கிராம் பால் மா பொதி ஒன்றின் விலை 80 ரூபாயாலும் குறைக்கப்பட்டது**

மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இலங்கை நுகர்வோர் விவகார அதிகார சபையினால் விடுக்கப்பட்ட அறிவிப்புக்கு அமைய இந்த விலைக் குறைப்பு அமலாகவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், உள்ளூர் பால் உற்பத்திகளின் விலைகளை குறைக்கப் போவதில்லை என உள்ளூர் பால் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.


தமது வருமானத்தில் 90 சதவீதம் பால் பண்ணையாளர்களிடம் இருந்து புதிய பாலை கொள்வனவு செய்ய விநியோகிக்கப்படுகிறது என்றும் மீதமுள்ள இலாபத்தின் தொகை வாகன எரிபொருள் செலவுக்காக தேவைப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும், இந்த குறைப்பு உள்ளூர் பால் பொருட்களின் விலையில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாது என்றும் உற்பத்தியாளர்கள் குறிப்பிட்டனர்.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வடைந்த நிலையில், பால்மா இறக்குமதியாளர் சங்கம், இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையைக் குறைத்தது.

1 கிலோ கிராம் பால் மா பொதி ஒன்றின் விலை 200 ரூபாயாலும் 400 கிராம் பால் மா பொதி ஒன்றின் விலை 80 ரூபாயாலும் குறைக்கப்பட்டது.

## மீளாய்வு மனு ஒத்திவைப்பு



நேற்று அழைக்குமாறு கோரப்பட்டுள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க அறிவித்ததை அடுத்து, மேற்குறித்த திகதிக்கு மனு ஒத்திவைக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரை சட்டமா அதிபரின் அனுமதியின்றி விடுவிப்பதற்கான அதிகாரம் நீதவானுக்கு இல்லை என்று மனுவில் சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதவான் விசாரணைகளில் போது, அரச சட்டத்தரணி எழுப்பிய ஆட்சேபனைகளை நீதவான் பிரசன்ன அல்விஸ் கருத்தில் கொள்ளாமல் சந்தேகநபர் ஒருவரை சகல குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவித்தமை சட்டத்துக்கு முரணானது என்றும் சட்டமா அதிபர் வலியுறுத்தியுள்ளார்.

நீதவானின் உத்தரவை இரத்துச் செய்து சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சட்டமா அதிபர் மனுவின் மூலம் மேல் நீதிமன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் வசந்த முதலிகேவுக்கு பொருந்தாது என்றும் சட்டத்தின் விதிகளை தவறாகப் பயன்படுத்துவதற்கான ஆதாரங்களை முறைப்பாட்டாளர் தரப்பு உருவாக்கியுள்ளது என்றும் அறிவித்த கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், அவரை ஜனவரி 31ஆம் திகதி விடுதலை செய்தார்.

காலி முகத்திடல் போராட்டம் குறித்து, ஒகஸ்ட் மாதம் 21 பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட வசந்த முதலிகே, 89 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் நவம்பர் 17ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு ஜனவரி 31 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக் கட்டளையின் கீழ் 90 நாட்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரச, தனியார் பங்களிப்பில் முன்னெடுக்க அனுமதி



அமைச்சர், வணிக மாதிரியின் கீழ் இத்திட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு ஓரளவு இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

குப்பைகளை அருவக்காடு அறிவியல் பூர்வமான சுகாதாரக் கிடங்கில் வைப்பதன் மூலம் சக்திக்குத் தேவையான இயற்கை எரிவாயுவையும் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரையும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**இத்திட்டத்தை மேலும் அமுல்படுத்துவதற்கு பொருத்தமான அமைப்பை தயார் செய்யுமாறு அமைச்சரால் அமைச்சின் செயலாளருக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைக்கு அமைய தகுந்த முறைமையை தயாரிப்பதற்காக நிபுணர் தொழில்நுட்ப குழுவொன்று நியமிக்கப்பட்டது.**

இந்நாட்டில் நிலவும் குப்பை நெருக்கடிக்கு முறையான விஞ்ஞான ரீதியிலான சுற்றுச்சூழலுக்கு உகந்த தீர்வை வழங்குவதற்காக உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத சுகாதாரக் கழிவுகளை சேமித்து வைப்பது வழமை என்றும், நாட்டின் குப்பை பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான தீர்வை வழங்கும் திட்டம் இது என்றும் அமைச்சர் கூறினார்.

## ஆசியான் நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்த பேச்சு



இராஜாங்க அமைச்சரின் அழைப்பின் பேரில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அகில இலங்கை புத்தசாசன சபையின் செயலாளர் முகுனுவெல அனுருத்த தேரரும் கலந்துகொண்டார்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வரும் பௌத்த மத இணைப்பு உட்பட ஆசியான் நாடுகளுடன் தொடர்பை வலுப்படுத்துவது குறித்து இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

ஆசியான் நாடுகளுக்கான இலங்கை பௌத்த பிக்குகளின் விஜயங்களை ஆரம்பித்தல் மற்றும் தனியார் துறையின் பங்களிப்புடன் ஆசியான் நாடுகளின் முன்னணி பௌத்த விகாரைகளுடன் இலங்கை பௌத்த விகாரைகளை இணைக்கும் வகையிலானதொரு வேலைத்திட்டத்தின் மூலம் பௌத்த மத உறவுகளை வலுப்படுத்துதல் தொடர்பான இராஜாங்க அமைச்சரின் பிரேரணையை ஆசியான் நாடுகளின் தூதரகத் தலைவர்கள் அன்புடன் வரவேற்றனர்.

**உறவுகளை வலுப்படுத்துதல் தொடர்பான இராஜாங்க அமைச்சரின் பிரேரணையை ஆசியான் நாடுகளின் தூதரகத் தலைவர்கள் அன்புடன் வரவேற்றனர்**

**பெயர் மாற்றம் கொழும்பு மாவட்டம்,**

மஹறகம பிரதேச செயலாளர் பிரிவில் 496A கொட்டாவ கிழக்கு கிராமசேகவர் பிரிவில் 1571/44 ஹொரணை வீதி பன்னிப்பிட்டிய எனும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட மொஹமட் தில்ஷாட் ஹனிபா ஆகிய நான், இன்றில் இருந்து மஹிரு தில்ஷான் ஹிமன்ச பெரேரா என எனது பெயரை பயன்படுத்துவேன் என இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

மாதவனை மயிலந்தனை குடியேற்றம்:

# மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பான்மையின எம்.பியை உருவாக்குவதே நோக்கம்

வி.ரி சகாதேவராஜா



மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பாராளு மன்றத்துக்கு சிங்கள உறுப்பினர் ஒருவரை உருவாக்கவே, மாதவனை மயிலந்தனை சிங்கள குடியேற்றம் திட்டமிட்டு அரங்கேறி வருகிறது. இதற்கு ஆளுநர் உரம் போடுகிறார் என்று தந்தை செல்வாவின் 125 ஆவது பிறந்த தினநினைவு நிகழ்வில் உரையாற்றிய அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

இந் நிகழ்வு, திருக்கோவில் காயத்ரி கிராமத்தில் தமிழரசுக் கட்சி உறுப்பினர் நந்தபாலு தலைமையில் வெள்ளிக்கிழமை (31) நடைபெற்றது . நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் 76% தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். இங்கே இதுவரை சிங்கள பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது மாகாண சபை உறுப்பினரோ இல்லை. எதிர்காலத்தில் இங்கு சிங்கள உறுப்பினர் ஒருவரை உருவாக்குவதற்காகவே தமிழ் மக்களின் விவசாய பிரதேசமான மாதவனை மயிலந்தனையில் சிங்கள குடியேற்ற திட்டத்தை ஆளுநர் செய்து வருகின்றார்.

யுத்தம் மௌனித்து, 14 வருடங்கள் முடிந்து விட்டன. ஆனால் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் எதையுமே செய்து முடிக்கவில்லை.

இந்நிலையில், மாதவனை மயிலந்தனை பகுதியில் தமிழர்களுடைய காணியை அடாத்தாகப் பிடித்து, சிங்களவர்களுக்கு கொடுப்பதற்கு காணி அளக்கப்பட்டு வருகின்றன.

இன்று, தமிழ் மக்களுடைய பிரச்சினை தீர்ப்போம் என்று ஜனாதிபதி ரணில் முன்வந்து இருக்கின்றார். உண்மையில் அவர் அப்படி செய்வாராக இருந்தால் இலங்கை அரசியல் அரங்கில் ஒரு பொருத்தமான நீதியான மாபெரும் தலைவர் ரணில் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்வோம்.

தந்தை செல்வா பல ஏமாற்றங்களை அன்று சந்தித்தார். அவர் சிங்களத் தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தம், பிரகடனம் கூட பிற்காலத்தில் கிழித்து எறியப்பட்டன. தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்தது தமிழினம். இன்று யாரையும் நம்பத் தயாரில்லை என்ற நிலைக்கு வந்திருக்கின்றது. இனியும் ஏமாறமுடியாது. எனவேதான் மிகவும் கவனமாக நிதானமாக பயணிக்கிறோம். மக்களும் நிலையை உணர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்

சுருக்கு வலை உட்பட சட்ட விரோத கடற்றொழில்களை தடுத்து நிறுத்தவும்

# “ஒரு வாரத்துக்குள் தீர்வு” பொலிஸார் வாக்குறுதி

சுருக்கு வலை உட்பட்ட சட்ட விரோத கடற்றொழில்களை தடுத்து நிறுத்துமாறு கோரி, வடமராட்சி வடக்கின் 14 கடற்றொழிலாளர் சங்கங்களால் பருத்தித்துறை பிரதேச செயலகம், யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியை முற்றுகையிட்டு நேற்று (03) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



போராட்டத்தின்போது. “மீனவர்களை வாழ விடு அல்லது சாகவிடு”, “மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் சுருக்கு வலையை உடனடியாக நிறுத்து”, “தடை செய்யப்பட்ட அனைத்து தொழிலையும் உடனடியாக நிறுத்து” என கோசங்கள் எழுப்பட்டன.

போராட்டம் காரணமாக, பருத்தித்துறை பிரதேச செயலக செயற்பாடுகள், பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்து என்பன பாதிக்கப்பட்டன. இதையடுத்து, பிரதேச செயலாளரும் பொலிஸாரும் போராட்டகாரர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டநிலையில், கடற்படையினருடன் கலந்துரையாடி ஒரு வாரத்துக்குள் சுருக்கு வலை உட்பட்ட சட்ட விரோத கடற்றொழில்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸார் வாக்குறுதியளித்தனர்.

இந்நிலையில் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன் ஜனாதிபதிக்கான மகஜரும் போராட்டகாரர்களால் பிரதேச செயலாளரிடம் வழங்கிவைக்கப்பட்டது.

கடற்றொழில் அமைச்சர் தமது பிரச்சினை தொடர்பாக கரிசனையுடன் செயற்படுவதில்லை எனவும் போராட்டகாரர்கள் குற்றஞ்சாட்டினார்.

போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதை அடுத்து, பிரதேச செயலக செயற்பாடுகள், பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்து என்பன இயல்பு நிலைக்கு திரும்பின.

போராட்டம் இடம்பெற்ற பகுதியில் பொலிஸார், புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாகாண இலக்கிய விழா

## போட்டிக்கான விண்ணப்பங்கள்

எம்.எஸ்.எம் ஹனீபா



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 2023ஆம் ஆண்டுக்கான மாகாண இலக்கிய விழா போட்டிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளதாக, கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ திஸநாயக்கா அறிவித்துள்ளார்

2022ஆம் ஆண்டு பிரசுரமான நூல்கள், குறும்திரைப்படங்கள் போன்றவற்றை கிழக்கு மாகாண எழுத்தாளர்களும், பதிப்பாளர்களும், தயாரிப்பாளர்களும் தமது படைப்புகளைச் சமர்ப்பிக்க முடிமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் ஆகக்குறைந்தது ஐந்து வருடங்களை நிரந்தர வதிவிடமாக கொண்ட இலக்கிய கர்த்தாக்கள், கலைஞர்கள், துறைசார் வல்லுநர்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிப்போர் 31.12.2022ஆம் திகதியன்று 50 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு www.ep.gov.lk எனும் வலைத்தளத்திலுத்தினூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்த விண்ணப்பங்களை இம்மாதம் 10ஆம்திகதிக்கு முன்னர் மாகாண பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம், திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஊர் மக்களின் உணர்வையும் பாரம்பரியத்தையும் ஆளுநர் அறிந்திருக்க வேண்டும்

## புன்னைக்குடா வீதி பெயர் மாற்றத்துக்கு கண்டனம்




ஏ.எச்.ஏ ஹுஸைன்

நகரின் பாரம்பரியம், கலாசாரம், அடையாளச் சின்னங்கள், மக்களின் வாழ்க்கை முறை பற்றி ஆளுநர் என்ற வகையில் நீங்கள் முழுமையாக அறிந்திருக்க வேண்டும் எனக் கூறும் கண்டனக் கடிதத்தை ஜனநாயக மக்கள் கட்சி பிரதேச செயலாளருக்கு ஊடாக கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளது.

ஏறாவூர் - புன்னைக்குடா வீதிக்கு ‘எல்மிஸ் வல்கம’ எனும் சிங்களப் பெயரைச் சூட்டுவதற்கு, ஆளுநர் எடுத்துள்ள நடவடிக்கைகளைக் கண்டித்து, இந்தக் கடிதம் ஏறாவூர் நகர பிரதேச செயலாளரிடம் நேற்று (03) கையளிக்கப்பட்டது.

ஜனநாயக மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் கே. அப்துல் வாஜித் தலைமையிலான அக்கட்சியின் முக்கியஸ்தர்கள், இந்தக் கடித்தத்தை ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் வி. நிஹாறா மௌஜுத்திடம் கையளித்தனர்.

ஆளுநருக்கு எழுதப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளதாவது: ‘எங்கள் நகரத்தின் அடையாளத்தை வடிவமைப்பதில், தெருக்களின் பங்கையும் நீங்கள் அங்கிகரிக்க வேண்டும். ஏறாவூரில் உள்ள வீதிகளில் பெரும்பாலானவை, ஏறாவூரில் குறிப்பிடத்தக்க கலாசார பாரம்பரிய நிகழ்வுகளுடன் தொடர்புடைய பெயர்களைக் கொண்டுள்ளன. தெருக்களின் பெயர்கள், நம் மக்களின் உணர்வுகளுடன் நெருங்கிய தொடர்புடையவை.

எனவே, நமது சமுதாயத்தின் பாரம்பரியத்திலும், அன்றாட வாழ்வியலிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த புன்னைக்குடா சாலையை அதன் பெயர் மாறாமல், இயற்கையான நிலையில் பராமரிக்க தேவையான நடவடிக்கையை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## சமாதான நீதவான்

கனகராசா சரவணன்




அம்பாறை மாவட்டம் வீரமுனையை பிறப்பிடமாகவும் தம்பிலுவிலை வதிவிடமாகவும் கொண்ட சமூகசெயற்பா ட்டாளரான மகேஸ்வரன் கண்ணதாசன், அம்பாறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி லுஷாக்கா குமாரி தர்மகீர்த்தி முன்னிலையில் வெள்ளிக்கிழமை (31) சமாதான நீதவானாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், பல அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களிலும் கடமையாற்றிய சமூக சேவகர் என்பதுடன் சமுர்த்தி திணைக்களத்தின் சமுர்த்தி முகாமையாளராகவும் கடமையாற்றியதுடன் தற்போது பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனின் ஆய்வு உத்தியோத்தராகவும் பிரத்தியேக செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றார்.

## பதவியுயர்வு

நூருல் ஹுதா உமர்



சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக பதில் கடமையாற்றிவரும் ஏ.சீ.எம் பழீல், முகாமைத்துவ சேவையின் விசேட தரத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

1994.01.26 ஆம் ஆண்டு பொது எழுதுநர் சேவைக்காக, முதல் நியமனம் பெற்ற ஏ.சீ.எம். பழீல், பொத்துவில் பிரதேச செயலகத்தில் தனது முதல் நியமனத்தை ஏற்று காரைதீவு, நிந்தவூர். சாய்ந்தமருது, கல்முனை ஆகிய பிரதேச செயலகங்களில், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக, பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தராக, பதவிநிலை உதவியாளராக மிகவும் திறமையாகவும், அர்ப்பணிப்புடனும் சேவையாற்றியுள்ளார்.



கிளிநொச்சியின் மினி சூறாவளி

## பாதிக்கப்பட்ட பகுதிகளை அதிகாரிகள் பார்வையிட்டு மதிப்பீடு

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சியின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் (02) பிற்பகல் வீசிய மினி சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாவட்டச் செயலகத்தின் துறைசார் அதிகாரிகள் பார்வையிட்டு மதிப்பீடுகளை மேற்கொண்டனர்.

மினி சூறாவளி காரணமாக, கிளிநொச்சி மகா வித்தியாலய வளாகத்தில் காணப்பட்ட மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் பாடசாலையின் தற்காலிக கொட்டகைகளும் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளன.

மேலும், கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக முறிந்து வீழ்ந்த மரங்களை அகற்றுவதற்கும், ஆபத்தான மரங்களை வெட்டுவதற்கும் துறைசார்ந்த பங்குதாரர்களுடன் இணைந்து மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் கள விஜயம் ஒன்றையும் நேற்று (03) காலை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, அரச மர கூட்டுத்தாபனம், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றின் அதிகாரிகள், பாடசாலை அதிபர், கிராம சேவையாளர் உள்ளடங்கலாக பல்வேறு தரப்பினரும் பிரசன்னமாகி இருந்தனர்.

சுழிபுரம் மேற்கு

## பல்கலைக்கழக மாணவரால் விசேட கருத்தரங்கு



நிதர்சன் வினோத்

சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால், நான்காவது வருடமாகவும் கல்வி பொதுத்தராதர சாதாரண தர மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கு, ஒன்றியத்தின் தலைவர் இரா. தர்ஷன் தலைமையில் சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலையத்தில் சனிக்கிழமை (01) சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த ஆரம்ப நிகழ்வில் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கான தயார்படுத்தல்கள் மற்றும் உளவியல்ரீதியாக பரீட்சைக்கு தயாராக்கும் முகமாக விசேட விழிப்புணர்வு உரைகள் ஆற்றப்பட்டது.

சுழிபுரம் மேற்கு இலவசக் கல்வி நிலையம் மற்றும் சங்கானை பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த மாணவர்கள் குறித்த கருத்தரங்கில் பங்குபற்றியுள்ள நிலையில், விசேட ஆசிரியர்கள் மூலம் கருத்தரங்கு தொடர்ச்சியாக பத்து நாள்கள் முன்னெடுக்கபட உள்ளது.

மன்னார் நகர சபையை

## மாநகர சபையாக தரமுயர்த்தும் விவகாரம்

### பிரதமருக்கு செல்வம் எம்.பி கடிதம்

எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் நகர சபையை மாநகர சபையாக தரம் உயர்த்துவது தொடர்பில், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு நேற்று (03) அவசர கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது: மன்னார் நகர சபையை மாநகர சபையாக தரம் உயர்த்துவது தொடர்பில் அமைச்சரவையில் இருந்து அங்கிகாரம் பெறப்பட்டுள்ளது. எனினும் இன்னும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை. எனவே விரைவில் மன்னார் நகர சபையை, மாநகர சபையாக தரம் உயர்த்துவது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி வைத்தியசாலையில் 23 வகை மருந்துகளுக்கு தட்டுப்பாடு




சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் முக்கியமான பல மருந்துகளுக்கு தொடர்ச்சியான தட்டுப்பாடு நிலவி வருவதாக வைத்திய சாலைத் தகவல்கள் மூலம் அறிய முடிந்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் இரண்டு இலட்சம் வரையான மக்களுக்கு சேவைகளை வழங்குகின்ற வைத்தியசாலையாக காணப்படுகின்ற கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில், முக்கியமான சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது

குறிப்பாக, சிறுநீரக நோயாளிகளுக்கான மருந்துகள், கற்பவதிகளுக்கான மருந்துகள் என்பன வைத்தியசாலையில் இல்லாத நிலை காணப்படுகிறது. மாவட்ட பொது வைத்தியசாலையில் மாதாந்த சிகிச்சை பெறச் செல்லும் நீரிழிவு நோயாளிகள், கர்ப்பவதிகளுக்கு குறித்த மருந்துகளை வெளியிடங்களில் பெற்றுக் கொள்ளுமாறு சிட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில், பெரும் பொருளாதார சுமைகளுக்கு முகம் கொடுக்கும் நோயாளர்கள், வெளியிடங்களில் பணத்துக்கு மருந்துகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் தவிப்பதாகவும் அறிய முடிகின்றது.

தற்போதைய தகவல்களின் படி, 23 இற்கும் மேற்பட்ட வகை மருந்துகள் இல்லாதுள்ளதாக அறிய முடிகின்றது.

தரம் 1க்கு சேர்த்துக் கொள்ளுமாறு

# அரசியல் அழுத்தம்

## ஹட்டன் அதிபர்கள் சிலர் புலம்பல்

சுதத் எச்.எம்.ஹேவா

புதிய ஆண்டில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளுமாறு அரசியல்வாதிகள் சிலர் கொடுத்த பல்வேறானா அழுத்தங்கள் காரணமாக ஹட்டன் கல்வி வலயத்தில், சில பாடசாலைகளின் அதிபர்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வந்தனர் என தகவல்கள் கிடைத்துள்ளன.

கிடைக்கப்பெற்ற இந்தத் தகவல் தொடர்பில் , ஹட்டன் நகரத்திலும் அதனை அண்மித்த சில பிரதேசங்களிலும் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள் சிலரிடம் வினவியபோது, இவ்வாண்டு முதலாம் தரத்துக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளுமாறு, அரசியல்வாதிகள் பலரும் அழுத்தங்களை கொடுத்தனர். இதனால் தாங்கள் பல்வேறானா அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தோம் என்றனர்.

அதுமட்டுமன்றி, பாடசாலையில் அனுமதி கிடைப்பதற்கு முன்னரே, அவ்வாறான அரசியல்வாதிகள், பெற்றோருடன் பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பிவைத்தனர். அந்த அதிகாரத்தை பயன்படுத்திக்கொண்ட சில பெற்றோர் தங்களுக்கு அழுத்தம் கொடுத்தனர் என்றும் அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் தங்களால் முறையாக கடமைகளைச் செய்யமுடியாத நிலைமையொன்று இருந்தது என்றும் சில பெற்றோர்கள், அரசியல்வாதிகளால் கொடுத்து அனுப்பப்படும் கடிதங்களை வைத்துக்கொண்டு, தங்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் என்றும் அதிபர்கள் தெரிவித்தனர்.

பாடசாலையில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் போது, மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கை உள்ளது. அந்தளவுக்கு மாணவர்களை சேர்த்துக்கொண்டுள்ளோம் என பெற்றோருக்கு தெளிவுப்படுத்தினாலும், அரசியல்வாதிகளின் கடிதங்களுடன் வரும்போது தங்களுடைய பிள்ளைகளை மட்டும் ஏன் சேர்த்துக்கொள்ள முடியாது என வாக்குவாதம் செய்கின்றனர் என்றும் அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

# கௌரவிக்கப்பட்டனர்

ராமு தனராஜா




ஹப்புத்தளை தமிழ் ஆரம்ப வித்தியாலய பிரிவில், கடந்த ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ஆறு மாணவர்கள் மற்றும் முன்னாள் அதிபர் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் ஹப்புத்தளை தமிழ் மத்திய கல்லூரியின் அதிபர் என். சந்திரமோகன் சிறப்பு விருந்தினராககட கலந்து கொண்டார்.

பெற்றோர், ஆசிரியர், ஆசிரியைகள் மற்றும் அதிபர் இணைந்து முன்னாள் அதிபரை கௌரவித்தது பாராட்டு நிகழ்வை நடத்தினர்.

கடந்த ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ஆறு மாணவர்கள் இந்த வைபவத்தின் போது பாராட்டப்பட்டனர்.



புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தை

# “கூட்டணி ஆதரிக்காது”

எஸ்.சதீஸ்



புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி ஒருபோதும் ஆதரவு வழங்காது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் எம்.பியுமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனை பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (02) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர், பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் அதிகரித்து இரண்டு வருடங்களுக்கு மேல் கடந்து விட்டது. இந்த அரசாங்கம் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். நாட்டில் தற்பொழுது அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்து வருகிறது. மக்கள் வாழ்வாதார பிரச்சினையில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் பேச்சுவார்த்தை நடத்தும் தொழிற்சங்கங்கள், பெருந்தோட்ட நிறுவனங்களோடு கலந்துரையாடி முறையான சம்பளத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும். தற்போது உள்ள அரசாங்கத்தில் அமைச்சு பதவியை பொறுப்பேற்றுக் கொண்டு, எந்தவோர் அபிவிருத்தி திட்டத்தையும் முன்னெடுக்க முடியாது. ஆனால் நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த காலத்தில், மலையகத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்றார்.

மக்களின் கஷ்டங்களை நன்கு அறிந்தவன் நான். அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றால் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அமைச்சுப் பதவி தேவையில்லை. மலையகத்தில் மாத்திரம் அல்ல நாட்டில் உள்ள படித்த இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புப் பிரச்சினை காணப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில் சஜித் பிரேமதாஸவின் அரசாங்கத்தில் அபிவிருத்தித் திட்டங்கள், முதல் படித்த இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பையும் பெற்றுக் கொடுப்பேன். அதேபோல் பெருந்தோட்ட தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளராக மாற்றி காட்டுவேன் என்றார்.

# க்ளாஸ் டௌனில் 9 நாள் முத்துமாரியம்மன் திருவிழா

மெய்யன்

மலையக மக்களின் இலங்கை வருகையுடன் தொடர்புடைய பழைமை வாய்ந்த கண்டி, பன்விலை க்ளாஸ் டௌன் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா 1ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இந்தத் திருவிழா 9 ஆம் திகதி வரை தொடர்ந்து 9 நாள்கள் விமரிசையாக நடைபெறவுள்ளது. 3ஆம் திகதி திங்கட்கிழமை கிராப சாந்தி வாஸ்து சாந்தி பூசைகள் நடைபெற்றன.

4ஆம் திகதி விசேட தீபாராதனை நடைபெற்று, பக்தர்களுக்கு விபூதி பிரசாதம் வழங்கப்படும். ஐந்தாம் திகதி புதனன்று முற்பகல் 9 மணிக்கு வேல் பூட்டு வைபவம் இடம்பெற்று பறவைக்காவடி ஊர்வலம் இடம்பெற்று தீ மிதிப்பு வைபவம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையுடன் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளது.அன்றைய தினம் மாலை வசந்த மண்டப பூசை நடைபெற்று ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேரிலேறி ஊர்வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பாள்.

6ஆம் திகதி விசேட தீபாராதனை நடைபெற்று விபூதி பிரசாதம் வழங்கப்படும். ஏழாம் திகதி மாவிளக்கு பூசை நடைபெறுவதோடு அடுத்த நாள் எட்டாம் திகதி பால் குட பவனியும் விசேட பூசைகளும் இடம்பெற்று அடுத்த நாள் கரகம் ஊர்வலம் வந்து குடிவிடுதலுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவுறும்.

# கண்காணிப்பு விஜயம்

ஷேன் செனவிரத்ன

இந்தியாவின் நிதியுதவியில் தம்புள்ளையில் 5,000 மெற்றிக்தொன்னுக்கும் அதிகமான அலகில் நிர்மாணிக்கப்படும் குளிரூட்டும் நிலையத்தை கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகர் கலாநிதி அதிரா எஸ் பார்வையிட்டார்.

இவ்வாறான விசாலமான குளிரூட்டும் நிலையம், தம்புள்ளை மரக்கறி விவசாயிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு நீண்டகால தேவையாக இருந்தது. இந்த நிலையம் நிர்மாணிக்கப்பட்டுவிட்டால், அவர்களின் தேவை முழுமையாக பூர்த்தியடைந்துவிடும் என்றும் தெரிவித்துள்ளனர்.

கண்காணிப்பு விஜயத்தின் போது, அங்கிருந்த விவசாயிகள் மற்றும் வர்த்தகர்களுடன் கலாநிதி அதிரா எஸ். கலந்துரையாடினார்.



# தன்னுயிரை மாய்த்த 2 பிள்ளைகளின் தந்தை

செ.தி.பெருமாள், காமினி பண்டார இளங்கதிலக்க

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள ப்ரௌன்ஸ்வீக் தோட்ட புளூம்பீல்ட் பிரிவில், இரண்டு பிள்கைளின் தந்தையான 53 வயதான நபர், தன்னுயிரை மாய்த்துக்கொண்டார் என மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

மனைவி வெளிநாட்டில் பணிபுரிகின்றார். பிள்ளைகள் இருவரும் தலைநகரில் பணியாற்றுக்கின்றனர். இந்நிலையிலேயே நேற்று (03) காலை, இவ்வாறு முடிவெடுத்துள்ளார்.

சம்பவம் நடந்த இடத்திற்கு மஸ்கெலியா பொலிஸார் மற்றும் கைரேகை நிபுணர்கள் சென்று பரிசோதனை மேற்கொண்டனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# டெங்கொழிப்பு விழிப்புணர்வு

ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பரவுவதை தடுக்கும் வகையிலான விழிப்புணர்வு செயற்றிட்டம் அந்தச் சபையின் ஊடாக முன்னெடுக்கப்பட்டது.

ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் பொது சுகாதார பரிசோதகர் எஸ். பாலகிருஷ்ணனின் ஆலோசனை மற்றும் கண்காணிப்புக்கு அமைய, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், வீடு வீடாகச் சென்று, டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அவை தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தினர்.



# 200 வருடங்கள் கடந்தாலும் பின்தங்கிய நிலையில் உள்ளது

எஸ்.சதீஸ்



மலையக மக்களின் வரலாறு 200 வருடங்கள் கடந்தாலும் அவர்களின் வாழ்க்கை நிலையையும் வாழ்வாதாரமும் பின்தங்கிய நிலையில் இன்னமும் காணப்படுவதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம். உதயகுமார் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (02) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது நாட்டில் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் மலையக மக்கள் மாற்றான் தாய் பிள்ளைகள் போல் புறம் தள்ளி வைக்கப்படுகிறார்கள் . நாடு தற்பொழுது பொருளாதார ரீதியில் பின் தங்கியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்திலும் கூட, பெருந்தோட்ட துறையை சார்ந்தவர்களே அந்நிய செலாவணி பெற்றுக் கொடுக்கின்றனர்.

பதவியை ஏற்று ஒரு வருடம் கடந்துள்ள போதும் தோல்வியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த இந்த அரசாங்கம் பயந்த நிலையில் உள்ளது.

மக்கள் மத்தியில் ஜனநாயகம் நிலைக்க வேண்டுமானால் நாட்டில் தேர்தல் இடம்பெறவேண்டும் அத்தியாவசிய பொருட்களின் விலை சொற்ப அளவிலேயே குறைக்கப்பட்டுள்ளது. டொலரின் விலை குறைந்தாலும் மக்கள் பாரிய கஷ்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர். நாட்டில் தற்பொழுது யுத்தம் மற்றும் பயங்கரவாதம் இல்லாத காலப்பகுதியில், இந்த அரசாங்கம் புதிதாக பயங்கரவாத தடைசட்டத்தை கொண்டுவர முயற்சி செய்கிறது இந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு ஆர்ப்பாட்டங்களையும் சமுக ஊடகங்களையும் முடக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது என்றார்.

# உழைக்காமல் வாழுகின்ற கூட்டம் ராஜபக்ஷ கூட்டம்

எஸ்.சதீஸ்



நமது நாட்டில் உழைக்காமலே வாழுகின்ற ஒரு கூட்டமே மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டம் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (02) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியால் இருக்கின்ற எமது நாட்டிற்கு முதலீட்டாளர்களை தடுக்கும் வகையில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் செயற்பட்டு வந்துள்ளது. ஆகையால் தான் நாட்டு மக்கள் கோட்டபாய ராஜபக்ஷவையும் மஹிந்த ராஜபக்ஷவையும் நாட்டைவிட்டு விரட்டினார்கள். ஆனால் அவர்களை பாதுகாப்பதற்காக தற்பொழுது பரமாத்மா ஒருவர் வந்துள்ளார். அவர்தான் தற்போதுள்ள ரணில் விக்கிரமசிங்க. நல்லாட்சி காலத்தில் நல்லவராக இருந்தார். இந்தஆட்சியில் அவர் மோசமானவராக உருவெடுத்து இருக்கிறார்.

ஊழல் செய்துள்ள 134 பேரையும் பாதுகாப்பதற்கு அந்த பரமாத்மா அங்கு சென்றுள்ளார். நாட்டில் யுத்தம் இடம்பெற்ற போது, தமிழர்களை அடக்கு முறைக்கு கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம்தான் இந்தப் பயங்கரவாத தடைச் சட்டம். அந்தக்காலத்தில் சிங்களவர்களுக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது. இன்று அந்தச்சட்டம் மாறுபட்டு உள்ளது. இந்தப் பயங்கரவாத சட்டத்தின் ஊடாக, ஒரு நபர் கைதுசெய்யப்பட்டால், ஒரு வாரம் அல்லது இரண்டு வருடங்களுக்கு தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள பொலிஸ் உயர்அதிகாரிகளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, இந்தப் பயங்கரவாத தடைச்சட்டத்தை தமிழ் முற்போக்கு கூட்டணி முழுமையாக எதிர்க்கிறது. இனிவரும் காலங்களில் அரசாங்கத்தையும் ரணில் விக்கிரமசிங்கவையும் எவரும் விமர்சிக்க முடியாது. நாட்டுக்கு நல்ல சட்டங்கள் அமல்படுத்தினால் அதனை நாம் வரவேற்போம். மக்களைப் பாதிக்கும் சட்டங்கள் வந்தால் அதனை எதிர்த்து செயற்படுவோம் என்றார்.

# சில்லறைகளை விழுங்கும் நடத்துநர்களும் விழிபிதுங்கும் பயணிகளும்

வீதியோரங்களிலும் முக்கிய ஸ்தானங்களிலும் வழிப்பாட்டு இடங்களிலும் காத்துகிடக்கும் யாசகர்கள்கூட, சில்லறைகளைக் கொடுத்தால் ஒருதரம் வெறுப்புடன் முறைத்துப்பார்ப்பர். அந்தளவுக்கு சில்லறைக்கு மதிப்பில்லாமல் போய்விட்டது.

சிறுவர்களுக்கான சாதாரண இனிப்புப் பண்டங்களின் ஆரம்ப விலை கூட, 10 ரூபாய் அல்லது 20 ரூபாயில் இருந்தே ஆரம்பிக்கின்றன. ஆக! சில்லறைகளை பெரும்பாலானவர்கள் எடுத்துச் செல்வதில்லை.

ஆனால், பொதுப் போக்குவரத்தை மட்டுமே நம்பியிருக்கும் மக்களுக்கும் நடத்துநர்களுக்கும் சில்லறை, சில்லறைத்தனமான பிரச்சினைகளை ஏற்படுத்தும் ஒரு விடயமாக மாறி வருகின்றது.

சாதாரண தொழில்களில் இருப்போர், இளம் வயதினர் 'போனால் போயிட்டு போகுது; மிச்சம் ஒன்பது ரூபாய்தானே' என, பஸ்களில் மிச்சக்காசு வாங்காமல் விட்டுவிடுவர். சிலர் நடத்துநர்களிடம் கேட்கவும் மாட்டார்கள். இன்னும் சிலர், பயணம் செய்யும் தூரத்துக்கான கட்டணத்தை சரியாகக் கொடுத்து 'கப்சிப்பென' இருந்துவிடுவர். ஆனால், இன்னும் சிலரோ குறிப்பாக வயதானவர்களோ, மிகுதி பணத்தை கொடுக்காவிட்டால், அது ஒரு ரூபாயாக இருந்தாலென்ன, நடத்துநர்களை ஒருகை பார்த்துவிடுவர்.

இலங்கை போக்குவரத்து சபை பஸ்களை பொறுத்தவரையில், இரவு எட்டு மணிக்குப் பின்னர், குறுந்தூர சேவையில் ஈடுபடும் பஸ்களின் நடத்துநர்கள், இறங்குவதற்கு ஓரிரண்டு பஸ் தரிப்பிடங்கள் அண்மிக்கும்போது, வந்து பணத்தை மட்டும் வாங்கிக்கொண்டு, பயணச்சீட்டை வழங்காமல் விட்டுவிடுவர். இதன்போது, மெல்லவும் முடியாது, விழுங்கவும் முடியாமல் பயணிகள் இறங்கிச் சென்றுவிடுவர்.

இந்தளவுக்கு பொருளாதார பிரச்சினைக்கு நாடு முகங்கொடுத்து கொண்டிருப்பதற்கு ஊழல், மோசடி மற்றும் மேலே குறிப்பிட்டதைப் போன்ற முறைக்கேடான செயற்பாடுகளும் காரணங்களாகும். ஆகையால், சின்னச் சின்ன விடயங்களாக இருந்தாலென்ன, கடுமையான கண்காணிப்பை மேற்கொண்டு, குற்றமிழைப்போருக்கு எதிராக ஆகக்கூடிய உச்சபட்ச தண்டனை பெற்றுக்கொடுக்க வழிசமைக்கவேண்டும். இல்லையேல், ஒருதரப்பினர் சுகபோகமாக வாழ, ஏனையோர் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்.

எந்தவொரு வர்த்தகமாக இருந்தாலென்ன, இடைத்தரகர்களே கூடுதலாகச் சம்பாதிக்கிறார்கள். விவசாயத்தைப் பொறுத்தவரையில், விவசாயிகளுக்கு கூடுதலான நன்மைகள் கிடைப்பது அரிதாகும். இடைத்தரகு முதலாளிகளுக்கே பெரும் இலாபம் கிடைக்கின்றது என்பதை சகரும் அறிவார்கள்.

ஆனால், பயணிகள் சேவை துறையைச் சேர்ந்த நடத்துநர்களை பொறுத்தவரையில், ஒருசிலர் சில்லறைகளை கொடுக்காமல் ஏமாற்றுவதில் பலே கில்லாடிகளாக இருக்கிறார்கள். பஸ்கட்டணங்கள் அதிகரிக்கப்படுமென அறிவித்தல் விடுக்கப்பட்ட ஓரிரு நிமிடங்களில், கட்டணங்களின் விவரங்கள் பஸ்களின் உள்ளே, ஆங்காங்கே ஒட்டப்படும்.

கடைசியாக, போக்குவரத்து கட்டணங்கள் குறைக்கப்பட்ட விவரங்கள், பெரும்பாலான பஸ்களில் காணக்கிடைப்பதில்லை. பொருட்கள், சேவைகளின் கட்டணங்களை குறைத்தால் மட்டும் போதாது; அவை முறையாக அமல்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பில் அவதானிக்கவும் மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கவும் ஒரு பொறிமுறையை உருவாக்குவது அவசியமாகும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எல்லாமே கிடைக்கும் என்றோ, எதுவுமே கிடைக்காது என்றோ நெஞ்சத்தை துன்பப்படுத்தக்கூடாது. மனம் எல்லா வழிகளிலும் பயணம் செய்கின்றது. இதை நிறுத்த முடியாது. ஆனால், இது துன்பங்களை உருவாக்குகின்றது.

எனினும் நல்ல விடயங்களை உறுதியாகப் பின்பற்றுங்கள். நிறுத்த முடியாத வாகனம் ஆபத்தானது. தவறுகள் எனத் தெரிந்து கொண்டால், உடன் களைந்து விடுக! கட்டுப்படாத எண்ணங்களால் மனிதன் அவஸ்தைப்படுகின்றான்.

அதீத உணர்ச்சிகளின் தாக்கம், நல்ல விடயங்களை ஆராய இடம்கொடாது. கனவுகளுடனே வாழ்பவர்கள் பலர் உண்டு. கஷ்டப்படாமல் இலகுவாகச் சாதனை செய்யலாம் எனக் கற்பனை செய்பவர்கள் எதிலும் முன்னேறுவது கடினம்.

முயலுதலே ஒருவரை உறுதியான நிலைக்கு அழைத்துச் செல்கின்றது. நல்லதைச் செய்ய ஒத்திவைத்தலாகாது. வெற்றிப் பயணத்தை உரிமையாக்கிக் கொள்!

-பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# முஸ்லிம்களுக்காக பேசுவது யார்?

மொஹமட் பாதுஷா

அரசியல் என்பது உண்மையில் யாருக்கானது? என்ற மயக்கமான ஒரு கேள்வி நமக்கு எப்போதும் இருந்து வருகின்றது.

ஆட்சியும் அதிகாரமும் இறைமையும் ஜனநாயகமும் 'மக்களுக்கானவை' என்று எழுத்தில் இருந்தாலும், நிஜத்தில் அதன் பலாபலன்கள் முழுவதும் மக்களைச் சென்றடைவதில்லை என்பதுதான், நம்மக்களது நெடுங்கால அனுபவமாக இருக்கின்றது.

இலங்கை உட்பட பெரும்பாலான நாடுகளின் அரசியல் என்பது, அரசியல்வாதிகளின் வயிற்றுப் பிழைப்புக்காகத்தான் நடந்து கொண்டிருக்கின்றது. பெரிய கட்சிகளும் தேசிய அரசியல் தலைவர்களும் தமது அதிகார வேட்கைக்காக, மக்களைப் பலிக்கடாவாக்கி உள்ளனர்.

இதற்கிடையில், வெளிநாட்டுச் சக்திகள், சர்வதேச அழுத்தக் குழுக்கள், உள்நாட்டு கலகக்காரர்கள் எல்லோரும் குழம்பிய குட்டையில் அல்லது, குட்டையை குழப்பிவிட்டு மீன்பிடிக்க ஆசைப்படுகின்றனர் அல்லது, முயலுகின்றனர் என்பதே யதார்த்தமாகும்.

பிழையான ஆட்சியாளர்களைத் தெரிவு செய்கின்ற மக்களின் தலைவிதி, எவ்வாறு இருக்கும் என்பதை கோட்டாபய ஆட்சிக்காலத்தில், இலங்கையில் வாழ்கின்ற எல்லா மக்களும் அனுபவ ரீதியாகக் கண்டனர்.

அதுபோல, மக்கள் நலனை இரண்டாம் பட்சமாகக் கருதுகின்ற மக்கள் பிரதிநிதிகள், தலைவர்கள் போன்றோரைத் தெரிவு செய்கின்ற மற்றும், அவர்களைக் கண்மூடித்தனமாக தலையில் வைத்துக் கொண்டாடுகின்ற மக்கள் கூட்டம் மற்றும் இனக்குழுமம் ஆகியவை சந்திக்கும் இழப்புகளும் பின்னடைவுகளும் எவ்வாறு இருக்கும் என்பதற்கு, இலங்கை முஸ்லிம் சமூகம் நல்ல உதாரணமாகக் கொள்ளப்படலாம்.

சுதந்திரத்துக்குப் பின்னர், முஸ்லிம் அரசியல் ஒரு மிதமான போக்கில் நகர்ந்து சென்றது. 80களின் பிற்பகுதியில் இருந்து, கிழக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டு, முஸ்லிம் இனத்துவ அடையாள அரசியல் பெருவளர்ச்சி பெற்றது. 1990களின் நடுப்பகுதியில் அது உச்சத்தில் இருந்தது.

2000ஆம் ஆண்டுக்குப் பின்னர், முஸ்லிம்களுக்கான அரசியலில் வீழ்ச்சியும் தேக்கநிலையும் வெகுவாக உணரப்படுகின்றது. அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள், எம்.பிக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டாலும், அவர்களால் சமூகத்துக்கு குறிப்பிடத்தக்க நன்மைகள் எதுவும் கிடைக்கவில்லை.

இத்தனைக்கும் கடந்த இருபது வருடங்களாக, பெரும்பாலான முஸ்லிம் கட்சிகளும் எம்.பிக்களும், அதிகாரத்துக்கு வரும் அரசாங்கங்களில் நேரடியாக ஓர் அங்கமாக இருந்து வருகின்றனர். ஏனையவர்கள், மறைமுகமாக அக்கட்சிகளுக்கு முட்டுக் கொடுக்கும் வேலையைத்தான் செய்து வருகின்றனர்.

இந்தப் போக்கின் காரணமாக, அரசியல்வாதிகள் வளர்ந்திருக்கின்றார்கள்; பலன்பெற்று இருக்கின்றார்கள். ஆனால், முஸ்லிம் சமூகத்துக்கான அரசியல் பலம்பெறவும் இல்லை; பலம் பெறவும் இல்லை. இதனால் தமது பிரச்சினைகள், அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கும் தமக்காகக் குரல் கொடுப்பதற்கும் யாருமற்ற ஒரு மக்கள் கூட்டமாகவே முஸ்லிம்கள் ஆகியிருக்கின்றனர்.

வடக்கு, கிழக்கில் உள்ள முஸ்லிம்களுக்கும் அதற்கு வெளியிலுள்ள முஸ்லிம்களுக்கும் பொதுப்படையான பல பிரச்சினைகள் உள்ளன. சில அபிலாஷைகள் வேறுபட்டவை; அவற்றுள், சமூகத்தின் நீண்டகால பிரச்சினைகளும் அவ்வப்போது உருவெடுக்கின்ற நெருக்கடிகளும் அடங்குகின்றன.

இருப்பினும், முஸ்லிம் கட்சித் தலைவர்கள் உள்ளடங்கலாக, பாராளுமன்ற உறுப்பினர்கள் யாரிடமும் இப்பிரச்சினைகள் பற்றிய சரியான புரிதலோ, முழுமையான ஆவணங்களோ இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் புரிதலுடன் ஆவண ரீதியாக, முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை அவர்கள் முன்வைத்துப் பேசியதாக ஞாபகத்திலும் இல்லை.

எனவேதான், முஸ்லிம்களின் எந்தவொரு பிரச்சினைக்கும், துரித தீர்வைக் காண முடியாதுள்ளது. அதுமட்டுமன்றி, இந்தப் பலவீனமானது, அரசாங்கமும் ஏனைய தரப்புகளும் தொடர்ந்து, முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைக் கேள்விக்கு உள்ளாக்கும் விதத்திலான நகர்வுகளைச் செய்வதற்கான தைரியத்தை கொடுத்திருக்கின்றது.

முஸ்லிம்களின் அடையாளத்தை பறிக்கின்ற கைங்கரியங்கள் நீண்டகாலமாகவே இடம்பெற்று வருகின்றன. கடந்த 10 வருடங்களுக்குள் ஹலால் சான்றிதழில் கைவைத்தமை, அடக்குமுறைப் பருவகாலத்தின் தொடக்கமாக கொள்ளப்படலாம். அதன் பிறகு 'ஹபாயா' ஆடை அணிவது மிகப் பெரும் சட்ட விரோத நடவடிக்கையாக பார்க்கப்பட்டது.

முஸ்லிம்கள் மீதான இனவாதம், வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட சம்பவங்கள் ஒருபுறமிருக்க, முஸ்லிம்களின் வர்த்தகமும் மிகச் சூட்சுமமான முறையில் சிதைக்கப்பட்டது. கருத்தடை மாத்திரைகள், கருத்தடை கொத்து, கருத்தடை உள்ளாடைக் கதைகள் எல்லாம், இனவாதப் பிரசாரங்கள் என்றாலும் மறுபுறத்தில் அவற்றின் நோக்கம், முஸ்லிம்களை பொருளாதார ரீதியாக வீழ்த்துவதாகவும் இருந்தது.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் தாக்குதலின் பின்னர், நிலைமை இன்னும் மோசமாகியது. முஸ்லிம்களின் இருப்பே பெரும் அச்சத்துக்கு உள்ளானது. பின்னர், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில், 'பெரிய அரசியல்' இருக்கின்றது என்று வெளிப்படையாகவே பேசப்பட்டது. இப்போது இந்த வழக்கே கிட்டத்தட்ட முடிவை நெருங்கியுள்ளது. ஆனால், இக்காலப் பகுதியில் அப்பாவி முஸ்லிம்கள் இழந்தவை இழந்தவைதான்.

2021 இல் ஏற்பட்ட கூட்டிணைந்த மக்கள் எழுச்சியும் ராஜபக்ஷர்களின் வீழ்ச்சிக்குப் பின்னரான ஆட்சி மாற்றமும் ஏதோ நல்லகாலம் பிறந்தது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி இருக்கின்றது. இந்தப் பின்னணயில், இன, மத ஒடுக்குமுறை இனிமேலும் தொடராது என்ற நம்பிக்கை சிறுபான்மை இனங்களுக்கு இருந்தது.

ஆனால், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் இன, மத அடையாளங்களை இல்லாதொழிக்கும் நகர்வுகள், வேறு வேறு தோரணைகளில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. தமிழர்களும் அவர்களது அரசியல்வாதிகளும் அதற்கு எதிராக பேசுகின்றார்கள்; போராடுகின்றார்கள்.

ஆனால், முஸ்லிம் சமூகம் இவ்விடயத்தில் என்ன செய்து கொண்டிருக்கின்றது? உதாரணமாக, திருகோணமலையில் ஒரு முஸ்லிம் ஆசிரியையை மையமாகக் கொண்ட 'ஹபாயா' ஆடை விவகாரத்துக்கு இன்னும் நீதி பெற்றுக் கொடுக்கப்படவில்லை. இதற்கிடையில், அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானியின்படி, முஸ்லிம் சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்கு இனிமேல் நீளமான 'ஹபாயா' அணிந்து நீதிமன்றத்துக்கு செல்ல முடியாது என்ற நிலை தோன்றியுள்ளது.

இது சட்டப்படியானது என்பதில் இரு கருத்துகள் இல்லை. ஆனால், ஓர் இனக் குழுமத்தின் அடையாளங்களை கேள்விக்குள்ளாக்கும் வகையிலான செயற்பாடுகள், எங்கே போய் முடியப் போகின்றன என்பதை சிந்திக்க வேண்டியுள்ளது.

வடக்கில் காணி அபகரிப்புக்கு எதிராக, தமிழ்ச் சமூகம் போராடி வருகின்றது. காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நகர்வுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக, வெடுக்குநாறி விவகாரம் இன்று தேசிய முக்கியத்துவம் மிக்கதாக மாறியிருக்கின்றது. அரசாங்கம் தனது நிலைப்பாட்டில் இருந்து இறங்கி வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால், இழப்புகளைச் சகித்துக் கொண்டு அல்லது பொறுத்துக் கொண்டு முஸ்லிம்கள் சும்மா இருக்கின்றனர். ஓரிரு அமைப்புகளும், செயற்பாட்டாளர்களும் மட்டுமே தொடர்ந்து முஸ்லிம்களின் உரிமைக்காகப் போராடி வருகின்றனர்.

அதைவிடுத்து, முஸ்லிம் அரசியல்வாதிகளோ சமூகமோ போராடுவதற்கும் பேசுவதற்கும் தயாரில்லை என்றால், இனியும் இழப்பதற்கு தயார்நிலையில் இருப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள இலட்சக்கணக்கான ஏக்கர் காணிகள் பற்றிய பிரச்சினை, ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவித்தல், எல்லை மீள் நிர்ணயத்தால் குறிப்பாக தென்னிலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள், முஸ்லிம் சமூகத்தின் இன, மத அடையாளங்கள் மீதான வன்மம் என எல்லாவற்றுக்குமாக குரல்கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

வெறுமனே, உழைத்தோம், உண்டோம், சொத்துச் சேகரித்தோம், மனதுக்குப் பிடித்த மக்கள் பிரதிநிதிக்கு வாக்களித்தோம், இழப்புகளை சகித்துக் கொண்டோம் என்று முஸ்லிம் சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

மறுபுறத்தில், மக்களுக்கான அரசியலைச் செய்வது போன்று பாசாங்கு காட்டிக் கொண்டு, தமது சொந்த இருப்பையும் பதவியையும் செல்வத்தையும் ஈட்டிக் கொள்வதில், முஸ்லிம் அரசியல் தலைவர்களும் எம்.பிக்களும் குறியாக இருக்கின்றனர்.

இவ்விரண்டு போக்குகளும் மாற வேண்டும்.

இல்லாதவிடத்து, முஸ்லிம் சமூகத்தின் இழப்புகளும் பிரச்சினைகளும் இனிமேலும் அதிகரிக்குமே தவிர, பிரச்சினைகள், நெருக்கடிகள் குறையும் என்று யாரும் கனவுகூட காணத் தேவையில்லை.

## கடிதங்கள்

### வயல் ஓரிடம்; வீடு இன்னோரிடம்
### நெல்லை விற்க முடியாமல் திண்டாடும் விவசாயிகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் அனைவரிடமும், நெல்லை அரசாங்கம் கொள்வனவு செய்யவேண்டும் என, பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

விவசாயிகளிடம் இருந்து கிலோ கிராம் 100 ரூபாய்க்கு நெல்லைக் கொள்வனவு செய்வதாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், கமநலசேவை நிலையம் ஊடாக நெல்கொள்வனவு, ஒரு விவசாயிடம் இருந்து 5,000 கிலோ கிராம் வரையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கொள்வனவு செய்யப்பட்டு வந்தாலும், இன்னும் பல விவசாயிகள் நெல்லைக் காயவைத்து, நல்ல விலைக்கு விற்கமுடியாமல் வீடுகளில் அடுக்கிவைத்துள்ளார்கள்.

கமநல சேவைகள் திணைக்களம், குறிப்பிட்ட சில விவசாயிகளிடமே நெல்லைக் கொள்வனவு செய்துள்ளதாகவும் ஏனைய பல விவசாயிகள், நெல்லை விற்கமுடியாத நிலையில் இருப்பதாகவும் தற்போது, தனியார் கிலோ கிராம் 88 ரூபாய்க்கு நெல்லைக் கொள்வனவு செய்வதாகவும் தெரிவிக்கின்றார்கள்.

விவசாயிகள் பொதுவாக தாம் வாழும் இடங்களில் இருந்து, சுமார் 20 கிலோ மீற்றருக்கு அப்பாலேயே விவசாய நிலங்களை வைத்திருக்கின்றார்கள். அவர்களின் விவசாய நில பதிவு ஒரு கமநலசேவை நிலையத்திலும் அவர்கள் தற்போது நெல்லினை காயவைத்து, இன்னுமொரு பிரிவிலுள்ள அவர்களின் வீட்டிலும் வைத்துள்ளார்கள்.

அவ்வாறான விவசாயிகள், வீடுகளுக்கு அருகிலுள்ள கமநலசேவை நிலையங்களில் நெல்லை வழங்கமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். பல விவசாயிகளிடம் நெல் இருப்பாக காணப்படுவதால், அவர்களின் நெல்லை அரசாங்கத்துக்கு விற்பனை செய்ய ஆவன செய்யவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

செ. கீதாஞ்சன்

# 2 ஆண்டுகள் சிறை: ராகுல் காந்தி மேன்முறையீடு

அவதூறு வழக்கில் தனக்கு விதிக்கப்பட்ட 2 ஆண்டு சிறைத் தண்டனையை எதிர்த்து காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரான ராகுல் காந்தி நேற்றைய தினம் மேன் முறையீடு செய்தார்.

ராகுல் காந்தி கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது, நிகழ்த்திய பிரசார உரையில் இந்திய பிரதமர் மோடியை அவதூறாகப் பேசினார்.

இதனையடுத்து ராகுல் காந்தியின் அவதூறு பேச்சுக்கு எதிராக பா.ஜ.க எம்.எல்.ஏ புர்னேஷ் மோடி, சூரத் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

இந்த வழக்கில் 4 ஆண்டு கால விசாரணைக்குப் பின்னர், கடந்த மாதம்




23ஆம் திகதி ராகுல் காந்தி குற்றவாளி எனத் தீர்ப்பளித்த நீதிமன்றம் அவருக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இத்தீர்ப்பு வழங்கப்பட்ட மறுநாளிலேயே ராகுல் காந்தியின் வயநாடு தொகுதி எம்.பி பதவி பறிக்கப்பட்டது.

இந்நிலையில், இப்போது தீர்ப்பு வந்து 11 நாள்கள் ஆன நிலையில், விசாரணை நீதிமன்றத்தின் தண்டனைத் தீர்ப்பை எதிர்த்து ராகுல் காந்தி நேற்றைய தினம் (திங்கட்கிழமை) சூரத் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளார்.

இத்தீர்ப்பானது ராகுல் காந்திக்கு சாதகமாக அமையும் பட்சத்தில் அவரது எம்.பி பதவி பறிப்பும் நிறுத்தப்படும் எனவும் அவர் மீண்டும் மக்களவைக்குச் செல்ல முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதே சமயம் பாதகமாக அமையும் பட்சத்தில் அவரால் 8 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.



மும்பை

## வைரலாகும் அம்பானி மனைவியின் நடனம்

இந்தியாவின் தொன்மையான வரலாற்றையும், கலாசாரத்தையும் பிரதிபலிக்கும் விதமாக மும்பையில் 52,000 சதுரடி பரப்பளவில் கட்டியெழுப்பப்பட்டுள்ள நீட்டா முகேஷ் அம்பானி கலாசார மையம் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

இத்திறப்பு விழாவில், ரஜினி காந்த், அமீர் கான், சல்மான் கான், ஐஸ்வர்யா ராய், பிரியங்கா சோப்ரா, சச்சின் டெண்டுல்கர் உட்பட ஏராளமான பிரபலங்கள் பங்கேற்றனர்.

இந்நிலையில் குறித்த நிகழ்வில் 'ரகுபதி ராகவ ராஜா ராம்' பாடலுக்கு நீட்டா அம்பானி ஆடிய நடனம் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளதோடு இணையத்திலும் வைரலாகி வருகின்றது.

ஓடும் ரயிலில் பயங்கரம்

கேரளா

## சக பயணிகளைத் தீ வைத்து எரித்த நபர்

கேரளா மாநிலம் ஆலப்புழா-கண்ணூர் விரைவு ரயிலில் மர்ம நபர் ஒருவர் சக பயணிகள் மீது பெட்ரோல் ஊற்றி தீ வைத்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவத்தின் போது ஓடும் ரயிலில் இருந்து குதித்த குழந்தை உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதே சமயம் 7 பேர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில்



அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக்கொடூர சம்பவத்தில் ஈடுபட்டு தப்பியோடிய மர்ம நபரை பிடிக்க சிசிடிவி காட்சிகளைக் கைப்பற்றி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இச் சம்பவமானது கேரளாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


மலேஷியா

## அந்த மீனை உட்கொண்ட பெண் மரணம்

எதிரிகளிடமிருந்து தன்னை காத்துக்கொள்ள உடலை பலமடங்கு பெரிதாக்கிக் கொள்ளும் 'பஃபர் மீன்' அதிக விஷத்தன்மை உடையது.

இதன் காரணமாக குறித்த மீன் பெரும்பாலும் உணவாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

இந்நிலையில், மலேசியாவில் அண்மையில் குறித்த மீனை 83 வயதான பெண்ணொருவர் சமைத்து, தனது



கணவருடன் இணைந்து உட்கொண்டுள்ளார்.

உணவருந்திய சில மணிநேரத்திலேயே இருவருக்கும் மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து இருவரும் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் குறித்த பெண்மணி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அத்துடன் அவரது கணவர் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவர்களது உணவில் கலந்துள்ள நஞ்சால் இறப்பு ஏற்பட்டுள்ளதாக கூறிய மருத்துவர்கள் பஃபர் மீனின் டெட்ரோடோடாக்சின் நச்சு காரணமாக இருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளனர்.



## யுவதிக்கு நள்ளிரவில் தொல்லை

### பொலிஸ் அதிகாரியை மடக்கிப் பிடித்த இளைஞர்கள்

சென்னை தாம்பரம் ரயில் நிலையத்திற்கு அருகே ஞாயிற்றுக்கிழமை (02) நள்ளிரவு சுரங்கப் பாதையில் தனியாக நடந்து சென்ற யுவதியொருவருக்கு சீனிவாஸ் நாயக் என்ற பொலிஸ் அதிகாரி பின்தொடர்ந்து சென்று தொல்லை கொடுத்துள்ளார்.

இதன் போது அவர் சீருடை இல்லாமால் கட்டை காற்சட்டை மற்றும் டி-சர்ட் அணிந்து இருந்தார் எனவும், பார்ப்பதற்கு தேநீர் விற்பனை செய்யும் நபர்போன்று காட்சியளித்தார் எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் சீனிவாஸின் நடவடிக்கைகளைக் கவனித்த இளைஞர்கள் சிலர் அவரை மடக்கிப் பிடித்து ரயில்வே பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சீனிவாஸ் ஒரு ஆர்.பி.எப் பொலிஸ்அதிகாரி என்பதும், அவர் மது அருந்தியிருப்பதும் தெரியவந்துள்ளது.

அத்துடன் அவரது அலைபேசியை ஆய்வு செய்த போது அதில் ஏராளமான பெண்களின் புகைப்படங்களும் இருந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து அப்பகுதியில் இருந்த சிசிடிவி காட்சிகளை அடிப்படையாக வைத்து பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

**சீனிவாஸின் நடவடிக்கைகளைக் கவனித்த இளைஞர்கள் சிலர், அவரை மடக்கிப் பிடித்து ரயில்வே பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சீனிவாஸ் ஆர்.பி.எப் பொலிஸ் அதிகாரி என்பதும், அவர் மது அருந்தியிருப்பதும் தெரியவந்துள்ளது. அவரது அலைபேசியை ஆய்வு செய்த போது அதில் ஏராளமான பெண்களின் புகைப்படங்களும் இருந்துள்ளன**

பிரான்ஸ்

## குட்டி போட்ட ஈபிள் கோபுரம்

பிரான்ஸின் தலைநகர் பரிஸில் உள்ள ஈபிள் கோபுரம் அருகிலேயே சிறிய ஈபிள் கோபுரம் ஒன்றை அந்நாட்டைச் சேர்ந்த பிலிப் மைண்ட்ரோன் என்ற கலை நிபுணர் உருவாக்கியுள்ளார்.



ஏப்ரல் முதல் நாளன்று ஒரே நாளில் நிறுவப்பட்டுள்ள இக்கோபுரத்துக்கு 'ஈபிலா' என பெயரிடப்பட்டுள்ளது .

இதனை உருவாக்கிய பிலிப் மைண்ட்ரோன், பெரிய ஈபிள் கோபுரத்தின் 10இல் ஒரு பங்கு பாகங்கள் மூலம் இந்தச் சிறிய ஈபிள் கோபுரத்தை உருவாக்கியதாகத் தெரிவித்துள்ளார்.


பரிஸில் 2 வார காட்சிக்கு பின்னர் இக் கோபுரமானது உலக நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உக்ரேன்

## விளையாட்டு வீரர்கள் 262 பேர் மரணம்

உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே இடம்பெற்று வரும் போரில் இதுவரை உக்ரேனிய விளையாட்டு வீரர்கள் 262 பேர் கொல்லப்பட்டதாகவும், 363 விளையாட்டு கூடங்கள் அழிக்கப்பட்டு உள்ளதாகவும் அந்நாட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் கவலை தெரித்துள்ளார்.

மேலும் "அடு த்தாண்டு பரிஸில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டி களில் ரஷ்ய வீரர்கள் அனுமதிக்கக் கூடாது என்றும், கடந்தாண்டு பெப்ரவரியில் போர் தொடங்கியதில் இருந்து உக்ரேனிய தேசிய அளவிலான



விளையாட்டு வீரர்கள் பலர் தங்கள் நாட்டைப் பாதுகாக்க தானாக முன்வந்து ஆயுதம் ஏந்தி போரிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று மூன்றாவது போட்டி:

# தொடரைக் கைப்பற்றுமா இலங்கை?



இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியானது டுனெடினில் நாளை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இலங்கையணி வென்றிருந்த நிலையில், இலங்கையணியில் பெரும்பாலும் மாற்றமிருக்காதென நம்பப்படுகிறது.

எனினும், நீண்ட காலத்துக்குப் பிறகு அணிக்குத் திரும்பிய குசல் பெரேராவிடமிருந்து வேகமாக ஓட்டங்களைப் பெறுவது எதிர்பார்க்கப்படுவதுடன், பதும் நிஸங்க, தனஞ்சய டி சில்வா, அணித்தலைவர் தசுன் ஷானகவிடமிருந்தும் தொடர்ச்சியான பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

பந்துவீச்சுப் பக்கம் டில்ஷான் மதுஷங்கவுக்குப் பதிலாக மதீஷ பத்திரண விளையாடக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இதேவேளை, நியூசிலாந்து அணியில் கடந்த போட்டியில் விளையாடிய சட் போவ்ஸுக்குப் பதிலாக வில் யங் விளையாடக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.



ஐ.பி.எல்:

## மும்பையை வீழ்த்திய பெங்களூர்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), பெங்களூருவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட மும்பை 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், திலக் வர்மா 84 (46) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், கரண் ஷர்மா 4-0-32-2, மொஹமட் சிராஜ் 4-0-21-1, றீஸ் டொப்லி 2-0-14-1, மிஷெல் பிறேஸ்வெல் 2-0-16-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 172 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், 16.2 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில், விராட் கோலி ஆட்டமிழக்காமல் 82 (49), அணித்தலைவர் பப் டு பிளெஸி 73 (43), கிளென் மக்ஸ்வெல் ஆட்டமிழக்காமல் 12 (03) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், பியூஷ் சாவ்லா 4-0-26-0 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக டு பிளெஸி தெரிவானார்.

முன்னதாக நடைபெற்ற சண்றைசர்ஸ் ஹைதரபாத்துடனான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஹைதரபாத்

ராஜஸ்தான்: 203/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: சஞ்சு சாம்ஸன் 55 (32), ஜொஸ் பட்லர் 54 (22), யஷஸ்வி ஜைஸ்வால் 54 (37), ஷிம்றோன் ஹெட்மயர் ஆ.இ 22 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: தங்கராசு நடராஜன் 2/23 [3])

ஹைதரபாத்: 131/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அப்துல் சமட் ஆ.இ 32 (32), மாயங்க் அகர்வால் 27 (23), உம்ரான் மலிக் ஆ.இ 19 (08), அடில் ரஷீட் 18 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: யுஸ்வேந்திர சஹால் 4/17 [4], ட்ரெண்ட் போல்ட் 2/21 [4], ஜேஸன் ஹோல்டர் 1/16 [3], கே.எம். ஆசிஃப் 0/15 [3], இரவிச்சந்திரன் அஷ்வின் 1/27 [4])

போட்டியின் நாயகன்: ஜொஸ் பட்லர்

இந்நிலையில், டெல்லியில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் குஜராத் லயன்ஸை புதுடெல்லி கப்பிட்டல்ஸ் எதிர்கொள்கிறது.



பெரியகல்லாறு மத்திய கல்லூரியின்

## விளையாட்டு போட்டியில் முதலிடம் பெற்ற முல்லை இல்லம்

க. விஜயரெத்தினம்

பெரியகல்லாறு மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் 584 புள்ளிகளைப் பெற்று முல்லை இல்லம் முதலாமிடத்தை தட்டிக் கொண்டது.

கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் 572 புள்ளிகளைப் பெற்று மருதம் இல்லம் இரண்டாமிடத்தையும், 506 புள்ளிகளைப் பெற்று நெய்தல் இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.



அவுஸ்திரேலிய குரான் பிறீ:

## வென்ற வெர்ஸ்டப்பன்

அவுஸ்திரேலியாவின் மெல்பேணில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவுஸ்திரேலிய குரான் பிறீயில், பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்த றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் வென்றார்.

**போர்மியுலா வண் சம்பியன்ஷிப் போட்டியில் 69 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நெதர்லாந்தின் வெர்ஸ்டப்பன் உள்ளது**

இந்நிலையில், பந்தயத்தை மூன்றாமிடத்திலிருந்து ஆரம்பித்த மெர்சிடீஸ் அணியின் லூயிஸ் ஹமில்டன் இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, அஸ்தன் மார்டின் அணியின் பெர்ணாண்டோ அலோன்ஸோ மூன்றாமிடத்தைப் பெற்றார்.

அந்தவகையில் இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப்புக்கான போட்டியில் 69 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நெதர்லாந்தின் வெர்ஸ்டப்பன் உள்ளதுடன், அவரின் சக றெட் புல் அணி ஓட்டுநரான சேர்ஜியோ பெரேஸ் 54 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், ஸ்பெய்னின் அலோன்ஸோ 45 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலும் காணப்படுகின்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 04 ஏப்ரல் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.